
உ

சிவமயம்

# அருள்மிகு அட்சயலிங்கசுவாமி,

# [கேடிலியப்பர்] திருக்கோயில், கீழ்வேளூர்.

# தல வரலாறு




திருக்கோயில் வெளியீடு :

அட்சயலிங்கசுவாமி திருக்கோயில்,

கீழ்வேளூர்-611 104.

...ட்டம். தஞ்சை மாவட்டம்.

T14952

R005E02

T·14952

உ

சிவமயம்.

# அருள்மிகு **அட்சயலிங்கசுவாமி,**

## [கேடிலியப்பர்] திருக்கோயில், கீழ்வேளூர்.

## தல வரலாறு

ஆக்கியோன் :

வடகை கவிஞர் **பசி**

திருக்கோயில் வெளியீடு

நன்கொடையாளர் :

திருமிகு **வி. சுப்பையா நாயுடு** அவர்கள்
கீழ்வேளூர்.

Sarasvati Mahal Library, Thanjavur

கிடைக்குமிடம் :

அருள்மிகு **அட்சயலிங்கசுவாமி** திருக்கோயில்,
கீழ்வேளூர்.

திருவாரூர் **வட்டம்.** தஞ்சை **மாவட்டம்.**

முதற் பதிப்பு : 1944
இரண்டாம் பதிப்பு : 1969
மூன்றாம் பதிப்பு : 1987

விலை : ரூ. 2-00

அச்சிட்டோர் : இராஜன் அச்சகம், கீழவீதி, கீழ்வேளூர்-611104.

**வே. முனியசாமி,** எம். ஏ., பி. எல்.
துணை ஆணையர்.

இந்து சமய அறநிலைய
ஆட்சித்துறை
மயிலாடுதுறை.
28-12-86


# அணிந்துரை

திருவாரூர் வட்டம்-கீழ்வேளூர் அருள்மிகு அட்சய-லிங்க சுவாமி திருக்கோயில் தலவரலாறு வெளிவருவது அறிந்து மகிழ்ச்சி அடைகிறேன். திருக்கோவிலைப்பற்றிய குறிப்புகள் சுருக்கமாகவும் தெளிவாகவும் அமைந்துள்ளன இதனை இயற்கை மருத்துவ ஆசிரியர் டாக்டர் வி. சுப்பையா அவர்கள் நன்கொடையாக அச்சிட்டு அளிக்கின்றார்கள். அவர்களின் பக்தி உணர்வும் இந்தத் திருக்கோயிலின் பால் கொண்டுள்ள பேரார்வமும் இதன் மூலம் தெரிகின்றது. அவர்களையும் தலவரலாறு எழுதி-யுள்ள திரு கவிஞர் பசி அவர்களையும் பாராட்டுகிறேன்

இத்தலவரலாறு விரைவாகவும் விளக்கமாகவும் வெளியிட ஏற்பாடு செய்துள்ளமையை பக்தர்கள் பாராட்டுவார்கள் என்று நம்புகிறேன்.

“கேடிலியை நாடுமவர் கேடிலாரே” என்ற அப்பர் திருவாக்கின் வண்ணம் அனைவரும் நலமுடன் வாழ இந்நூல் துணைபுரிய இறைவனை வேண்டுகிறேன்.

**வே. முனியசாமி.**



# முன்னுரை

'கீழ்வேளூராளும் கோவைக் கேடிலியை நாடுமவர் கேடிலாரே"
- அப்பர் திருவாக்கு

திருவாரூர் வட்டம் திருக்கீழ்வேளூர் அருள்மிகு கேடி-லியப்பர் தல வரலாறு 1944-லும், 1969-லும் அச்சிடப் பெற்று வெளிவந்துள்ளன. இப்பதிப்பு 1987ல் மூன்றாம் பதிப்பாக அச்சிடப்பெற்று வெளிவருகின்றது.

கேடிலியப்பரின் திருவருளால் இந்நூல் சிறப்பாக அச்சிட்டு வெளிவர பொருளுதவி புரிந்த கீழ்வேளூர் திருமிகு வி. சுப்பையா நாயுடு அவர்களை மனதாரப் பாராட்டி மகிழ்கின்றோம்.

தலவரலாறு குறித்து நேரில் வாழ்த்துக்கூறி அணிந்துரை தந்த மயிலாடுதுறை இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை துணை ஆணையர் திருமிகு வே. முனியசாமி எம். ஏ., பி. எல், அவர்களுக்கும், நேரில் நல்லாசி வழங்கிய நாகை உதவி ஆணையர் திருமிகு தி.ஜெயராமன் பி. ஏ. பி. எல். அவர்களுக்கும் வணக்கத்தை உரித்தாக்கிக்கொள்கிறோம்.


இந்நூலை செந்தமிழில் குன்றாத சுவையோடு ஆக்கித்தந்த வடகை கவிஞர் பசி அவர்களைப் பாராட்டி மகிழ்கின்றோம்.

இந்நூலை குறுகிய காலத்தில் அழகுற அச்சிட்டுத் தந்த கீழ்வேளூர் இராஜன் அச்சகத்தாருக்கு எங்கள் மனமார்ந்த நன்றியினை கனிவோடு தெரிவித்துக்-கொள்கிறோம்.

பக்தர்கள் யாவரும் இந்நூலைப் படித்து, அருள்மிகு கேடிலியப்பரின் திருவருளைப்பெற அன்போடு வேண்டிக்கொள்கிறோம்.

**இராம. நடராசன்,**
தக்கார்.

**எஸ். ஜோதி** பி. ஏ.
நிர்வாக அதிகாரி.



உ
சிவமயம்

# அருள்மிகு கேடிலியப்பர் திருக்கோயில், கீழ்வேளூர்.

## தல வரலாறு.

உலகெலாம் உணர்ந்து ஓதுதற்கு அரியானே உருவாய் அருவாய் உருவருவாய்ப் பன்னுயிரந் திருநாமங்கொண்டு இந்நிலவுலகெங்கும் எழுந்தருளியுள்ள திருத்தலங்களிலே வான்பொய்ப்பினும் தான் பொய்யாச்சோழர் தம் குலக்கொடியாம் காவிரியின் தென்பாலுள்ள தேவரமிழ்தினுமினிய தேவாரப்பாடல் பெற்ற திருக்கோயில்கள் வரிசையிலே எண்பத்து நான்காவதாகத் திகழ்வது கீழ்வேளூராகும்.

''எண்டோளீசற்கு எழில் மாடம் எழுபது செய்துலகம் ஆண்டான்'' எனப்பெரிய திரு மொழியில் திருமங்கையாழ்வாரும், ''பெருக்காறு சடைக்கணிந்த பெருமான் சேரும் பெருங்கோயில் எழுபதினோடெட்டும்'' எனத்திருத்தாண்டகத்தில் ஆழிமிசைக்கண் மிதப்பிலனைந்தபிரான் அப்பரடிகளும் செப்பியுள்ளவாறு, சிலந்தியாய்ச் சிவபதம் பெற்ற கோச்செங்கட்சோழன் தம் முன் வினைப்பயன் முனைந்தூட்ட எழுப்பிய யானையேறா மாடக்கோயில்களுள் இன்றைக்குச் சுமார் எழுநூற்றாண்டுகட்கு முன்னர் கேடின்மையைக்காட்டும்விமானம் உள்ளிட்ட அனைத்தையும் கருங்கல்லாலேயே கட்டுவித்துத்தம் புகழ் நாட்டுவித்தார். இதனையே எழுத்தையெல்லாம் தம்புறத்தேயெழுதி அகத்தேபதித்துக்கொண்ட அந்தகக்கவி வீரராகவ

முதலியார் யாத்தருளிய கீழ்வேளூர் உலாவில் ''எங்குங் கேடுண்டாயு மித்தலங் கேடின்மையால் தங்குங் கேடில்லா தவனானோன்'' என ஏற்றிப்போற்றியுள்ளார்.

உழவாரப் பணியாற்றிப் பிறவிப்பிணியறுத்த பெம்மான் திருநாவுக்கரசு நாயனார் ''கீழ்வேளூர் ஆளுங் கோவைக்கேடிலியை நாடுமவர் கேடிலாரே'' என இவண் போந்தொரு செந்தமிழ்ப்பதிகம் பாடியுள்ளார்.

பூழியர் கோன் வெப்பொழித்த புகலியர் கோன் திருஞானசம்பந்த நாயனார் ''புகழ்மிகு கீழ்வேளூருள் னுலாவிய சிந்தையர், மேல்வினையோடிட வீடாமே'' என்று ஞானப்பால் உண்ட வாயால் நந்தமிழ்ப்பதிகம் இசைத்துள்ளார்.

ஆற்றிலேயிட்டு ஆரூர் குளத்திலே பொன்னெடுத்த ஆளுடை நம்பி கடனாகைக் காரோணமேவியிருந்து ''மறியேறு கர தலத்தீர் மாதிமை யேலுடையீர் கிறிபேசிக் கீழ்வேளூர்புக்கிருந்தீரடிக்கோர்'' என்றொரு விண்ணப்பஞ்செய்கின்றார்.

திருப்புள்ளிருக்கு வேளூர் அருள்மிகு பாலாம்பிகை தந்தருளிய முத்துமாலையால் வந்துதித்த இசைமாமணி முத்துசாமிதீட்சதர் திருத்தணிமுருகனைக்குருவாய்க்கண்டு கற்கண்டு சொற்கொண்டு ''குருகுஹ'' என்ற முத்திரையோடு இருபது கீர்த்தனைகள் செய்துச் சேவித்து திருத்தலயாத்திரையை மேற்கொண்டு ஆங்காங்கே ஐநூற்றுக்கும் மேலான கீர்த்தனைகளாலே திருவடிப்பெருமையைப் பாடிக்கொண்டு கீழ்வேளூர் கேடிலியப்பர் திருக்கோயில் வந்தெய்தினார் தினக் கடன் முடித்துத்தீர்த்தமாடி தெய்வத் தரிசனத்திற்கு வருமுன்னர், இவர்தம் பெருமையறியாத குருக்கள் கோயிலை மூடிக்கொண்டு வீடேகினார்.

எங்கும் நிறை ஈசனை இங்கும் கண்ணுறும் காதல் பொங்கிட ''அக்ஷயலிங்க விபோ-ஸ்வயம் போ'' என்று சங்கராபரணத்தில், திருவாரூர் தேரசையும் அழகொக்க இசைத்துத்திருக்கதவம் திறக்கப்பெற்று களித்தார் இவர் தம் அறுபதாம்அகவையில் அஃதாவது கி. பி.1853 ஆமாண்டு தீபாவளித் தினத்தன்று சிவபதமடைந்தார்.

மேலுமித்தலம் பற்றி க்ஷேத்திரக்கோவைப் பிள்ளைத் தமிழ்-வாரானைப் பருவத்தில் ''மண்டு பேரொளியான, கேடிலியை யர்ச்சித்த, வள்ளி நாயகன் வருகவே. மாகாளி கரத்த கீழ்வேளூரில் மாதவம், வளர்த்த வேலவன் வருகவே'' எனும் அடிகள் கண்டு உளங்கொண்டு ஓர்வோமாக. நஞ்சை சூழ் தஞ்சையின் தாயாம் காவிரியின் கிளை நதியாகிய அகஸ்திய காவிரியென்று அழைக்கப்பட்ட வெட்டாற்றினின்றும் பிரியும், ஆளுடைப் பிள்ளைக்கும், நம்பிக்குமாக இருவர்க்கும் ஈசனே ஓடம் விட்டதனால் ஓடம்போக்கியெனும் பெயர் கொண்ட சிற்றாற்றின் தென்கரையில், திருவாரூருக்குக்கிழக்கே 12கி.மீ திருச்சிக்கலுக்கு மேற்கே 7கி. மீ தொலைவில் பேருந்துத் தடத்தில் இத்திருத்தலம் அழகுற அமைந்துள்ளது. சிவ நேயர்கள் பவம் போக்கும் தீர்த்தங்கள் ஒன்பது கொண்டு தேரோடிய வீதிகள், வடம்போக்கிகள், நாற்புறமதில்கள், கோபுர வாயில்கள், மடவிளாகம், செண்பகவனம் முதலியன கொண்டு இதுகாறும் இலங்குகின்றது.

ஆதியில் தேவாசுரர்கள் கூடித்திருப்பாற்கடலைக் கடைந்த போழ்து எழுந்த அமிழ்தத்துளியொன்று இரண்டாகச் சிதறி செம்பாகம் இந்தியப் பெருநாட்டின் வட பாகத்தில் விழுந்து இலந்தை மரமாகிப் பின் வனமாகி வடபதரிகாசிரமம் ஆயிற்றாம்; செம்பாகம் இவண் வீழ்ந்து இலந்தை வனமாகி ''தென் பதரிகாரண்யம்'' ஆயிற்றாம்

என்பர் சிவனன்பர் எனவே இத்தலத்தில் இலந்தையே தலவிருட்சமாயிற்று என்பதேற்புடைத்தாம்.

பரம் பொருளின் மறுவுருவாம் பால முருகன் வீரக் கொலைப் பழி நீங்கும் பொருட்டு தந்தையாம் சிவத்தைப் பூசனை செய்தமையான் ''பூசரண்ய புரம்' எனவும் பெயராய பெற்றியுடைத்து செந்தமிழுக்குச் சொந்தமாய் கந்தப் பெருமான் விண்ணுலகில் உறையும் பதியை 'மேல் வேளூர்' என்னுமாப் போலே இந்தப் பூவுலகில் தங்கித் தவமிருந்தயிந்தப் பதியை ''கீழ்வேளூர்'' என்று போற்றுகின்றனர்; புகழ்கின்றனர். இவண் சிவன் சித்திரக்கூட மலையின் மீது எழுந்தருளியிருத்தலால் ''சித்திரக்கூட பர்வதம்'' என்றும்; அழிவற்ற முழு முதற் கடவுளாக விளங்கும் பரம் பொருளை, வடமொழியாம் வாடாமொழியின் ''ஸ்ரீ அட்சயலிங்க சுவாமி'' என்றும்; தொன் மொழியாம் தேன் மொழியில் ''கேடிலியப்பர்'' என்றும்; அழிவிலா அம்மை அகிலாண்ட நாயகியை ''சுந்தர குஜாம்பாள்'' எனவும் 'வனமுலை நாயகி' எனவும் பண்டு முதலே கண்டு பரவுகின்றனர்.

## 1 கந்தனின் கொலைப்பாவம் தீர்த்த

''பூசரண்ய புரீசன்''

உலகமுய்ய உம்பர் வாழ கருணை கூர்முகங்களாறுங் கரங்கள் பண்ணிரண்டுங் கொண்டே வத்துதித்தக் கந்தன் சூரனை அடுத்தாண்ட கொலைப் பாவம் தீர்த்தற் பொருட்டு திருச்செந்தூரில் அமர்ந்து சிவபெருமானைப் பூசித்தார். அருமந்த மைந்தனின் அகமறிந்த அம்மையப்பன் ''தென்னிலந்தை வனம் சென்று எம்மை நோக்கித் தவமிருந்தால், கொலைப்பாவம் விலகும், கொண்டிடலாம் திருமணம்'' என விளம்பினார், விழைந்தார். அக்கணமே

மூக்கண்ணார்மகன் நவவீரர்கள் உள்ளிட்ட தம்படையுடன் இத்தலம் வந்தெய்தினார். தனதடி வழிபடும் அவரிடர் கடி கணபதியை முதற்கண் இப்பதரி வனத்தின் வடபால் 2 கல் தொலைவில், மஞ்சலால் அமைத்து வணங்கியமை-யானே 'மஞ்சாடி' என்ற ஊராயிற்று சிவபெருமான் அருளியவாறே ஐந்துலிங்கவமைப்பும், நவலிங்கபூசையும் செய்வான் வேண்டி செந்தில்வேலன், கிழக்கு நோக்கி 2 கல் தொலைவில் 'பாதாள கங்கை' தீர்த்தமும்; கைலாச-நாதர் சௌந்தரநாயகியும் அமைவுறச்செய்து வணங்கிய-மையானே கோவில் கடம்பனூராயிற்றென்பர் கீழ்ப்பால் 2 கல் தூரத்தில் சதுர்வேதமூர்த்தி தருண சொரியை வகுத்து வழிபட்ட இடமே ஆழியூராயிற்றென்பர் கீழ்ப்பால் 4 கல் தொலைவில் சௌந்தரநாயகி சுந்தரேஸ்வரரை வணங்கியமையானே இளங்கடம்பனூராயிற்றாமென்பர். வடகி-ழக்கில் 5 கல் தூரத்தில் சுந்தரகேசி சோமநாதரை அமைத்து அர்ச்சித்த ஊரே பெருங்கடம்பனூராயிற்றா-மென்பர். வடகிழக்கில் 4 கல்லில் கடம்பர வாழ்க்கையில் லோகாம்பாள் சகளநாதரை வழிபட்டு பஞ்ச லிங்க பூசை-யைப் பூர்த்தி செய்தார் கார்த்திகேயர் என்பர்.

தொடர்ந்து நவலிங்க பூசையை நடாத்துவான் வேண்டி, கார்த்திகை திங்கள் ஆதி வாரத்தில் ஒருதரம் முழுகினால் மீண்டும் கருக்குழி முழுகாத் தன்மையைத்-தரக்கூடிய "அதிபாவனம்" என்ற தீர்த்தத்தையும் நர்மதேஸ்வரி நர்மதேஸ்வரரையும் அமைத்து வணங்கிய இடமே வல்லமங்கலமாயிற்றென வழங்குவர். அவ்வழியே திருக்கண்ணங்குடி மாமாயமாமன் கண்ணபிரானையும் வழிபட்டுத் தெற்கே பட்டமங்கலத்தில் விசாலாட்சி விஸ்-வநாதரையும் வழுத்தி; சொட்டால்வண்ணம் மகேஸ்பரி பூசேசரை பூசித்துக்கதலிவனமெனும் தேவூர் தேவபுரீசு-

வரரைத் துதித்து இறுதியாக மேற்பால் ஒரு கல் மதுகவடனம் வந்து ஒதியத்தூரில் தூலாநாயகி துலேசரைதொழுது துதித்து நவலிங்கபூசையை நிறைவு செய்துக்கொண்டார் நவவீர நாயகர் என்பர்.

ஆதி இலந்தையின் கீழ் சுத்த சுயம்புவாய் ஜோதி வடிவமாய் விளங்கா நின்ற இலந்தை வன நாதரை சிவலிங்கப்பெருமானைக்கண்ட குழந்தைவேலன் நவ வீராதியோரைக்கொண்டு; இத்தலத்தைத்துப்புரவாக்கி தேவதச்சனைக் கொண்டு நூதன தேவாலய நிர்மானஞ்செய்து புஷ்கலம் என்ற பெயருள்ள விமானத்தை அமைவித்தார்.

கிழக்குக் கோபுர வாயிலில் அக்னி மூலையில் அமைந்துள்ள திருக்குளத்தை முருகப்பெருமான் தம்முடைய வேலாயுதத்தால் உண்டாக்கித்தாம் முகற்கண் நீராடியதன் பின் நவ வீரர்களையும், நூற்றெட்டு சேனாதிபதிகளையும், ஈராயிரம் வெள்ளம் பூதப்படையினரையும் நீராடச் செய்வித்தாரென்பதானே இத்திருக்குளம் சரவணத் தீர்த்தமாக விளங்குகிறது.

வேலாயுதன் தம் கொலைப் பாவமும் வீரகத்தியும் விலகும் பொருட்டு ஐம்புலன்களையும் அவித்துத் தவம் மேற்கொண்டார். இவர் தவம் முற்றுப்பெறாவாறு வீரகத்திகள் இடையூறுகள் விளைவித்தன. அப்பனுக்குச்செய்விக்கும் ஆராதனையை நிறைவேற்றச் செய்திட அம்மையை அழைத்தார் ஆறுமுகக் குமரன்.

ஆற்றல் மிகு ஆறுமுகமேயாயினும் அம்மையப்பனுக்குப் பிள்ளைதானே என்பதை ஆருயிர்கட்கு உணர்த்துகின்றனரோவென ஓர்ந்திடல் வேண்டும். அருள்மிகு வனமுலை நாயகி, பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப்பரிந்து விரைந்து பத்ரகாளியாய் எழுந்து நான்கு

திக்குகளிலும் ஆகாயத்திலுமாக வட்டமிட்டு அஞ்சேல் என்று காத்தருளியமையானே அஞ்சுவட்டத்தம்மன் எனுந் திரு நாமங்கொண்டு, வேண்டுவார்க்கு வேண்டுவான் ஈவாள் கண்டீர் - அன்று தொட்டு பரமன் பணித்தபடி குமரன் பாலசுப்பிரமணியனாக அக்கினிபாகத்திலும், அம்பிகை வன்முலை நாயகி பத்ரகாளி வடிவத்துடன் அஞ்சுவட்டத்தம்மையாகி ஈசான்ய பாகத்திலும் எழுந்-தருளி இணையடிகளில் விழுந்து எழுந்து, அழுதுத்தொழு வார்க்கு அரணாய் அமைந்துள்ளமையானே அட்சயலிங்-கம் அரணமளித்த நகரேசனானார்.

## 2 முரஹரன் பூசித்த முதலோன்

நரகாசுரனை நசித்த முரகரனின் வீர கத்தியையும் இத்தல ஈசன் நீக்கியருளியமையானே முரஹரன் பூசித்த முதலோன் எனவும் ஏற்றிப் போற்றினர்.

## 3 பிரமன் பூசித்த பெம்மான்

பிர்மாவின் படைப்பாற்றல் குறையவே இத்தல மடைந்து வடக்குகோபுரவாயிலின் எதிரில் 'பிரமதீர்த்தம்' உண்டு பண்ணி அதில் மூழ்கி பர்மனை வழிபட்டு மீண்டும் ஆற்றல் பெற்றாரென்றும் அத்தீர்த்தமே திருமஞ்சனக்-குளமாக விளங்குகின்றதாமென்பர்.

## 4 அரிவினை தீர்த்தோன்

தேவ குருவாகிய வசிட்டரை வணங்காமையானே இழந்த செல்வத்தை மீண்டும் பெறுவதற்கான வழி முறையை இந்திரன் அறிந்து, இத்தலத்திற்கு மார்கழித்-திங்கள் அமாவாசையன்று வந்து, நிறுதி மூலையில் "இந்திர தீர்த்தத் தடாகம் தொட்டு அதில் மூழ்கி, யானைக் கொயேற்றுவித்து, சித்திரைத் திங்கள் விழா

எடுத்துத் தன் சாப நீக்கமும் ஊக்கமும் பெற்றாராதலான் இத்தலத்து ஈசனை யானைப் பாதகைத்திருநாளன் என்றும், பொற் கோயிற்பிரானென்றும் ஏற்றிப் போற்றினர் என்பர். தோற்றிருக்கும் முருகன் முன்னர் மயிலின்றி களிறொன்று நிற்றல் பற்றி நினைந்திடல் வேண்டும்.

## 5. எழு நாவுக்கு வேட்ட நல்கினோன்

தேவலோக வாசிகளான மருத்துவர்கள் இயற்றிய யாகத்தில் அளிக்கப்பெற்ற அவிர்பாகத்தை அருவருப்புடன் பெற்றுக் கொண்ட காரணத்தான் ஏற்பட்ட குன்ம நோய் தீரும் பொருட்டு; இப்பதிக்கு வந்து தென் மேற்கு மூலையில் " அக்கினி தீர்த்தம் " ஆக்கிச் சிவனை வழி பட்டு நன்மையடைந்தாரென உண்மையாளர் உரைப்பர்.

## 6. எமன் பெற்ற ஏற்றம்

எமன் தான் சிவனுக்கும் சிவனடியார்க்கும் செய்த தீவினையனைத்தையும் தீர்த்திடக் கருதி இப்பதரி வனம் புகுந்து, தென்மேற்கு மூலையில் 'யம தீர்த்தம்' அமைத்து அதில் மூழ்கி விதிப்படி கேடிலியை வணங்கித் தூய்மையாளனாயினான். அக்னி தீர்த்தம், யமதீர்த்தம் இரண்டும் இணைந்தேயின்று இவண் அரசாணிக்குளமாயிற்றென்பர்

## 7. சந்திரனின் சாதனை

ஓர் ஆனித்திங்கள் சதுர்த்தியன்று மோதகப்பிரியரான விநாயகரின் பெருத்த பேழை வயிற்றைப் பார்த்துப்பரிகசித்த பழியால் சந்திரனைக் கணபதி சபித்ததின் காரணமாக சகலரும் சந்திரனைப் பழிக்கும் வண்ணம் கலைகள் குறையத் தொடங்கியமையானே மங்கி மயங்கிய திங்களோன் இப்பதியையடைந்து ஈசான்யத்தில் சந்திர தீர்த்தம் (தேரடிக்குளம்) உண்டாக்கி மூழ்கிச் சிவபெருமானை முக்காலமும் வணங்கி எக்காலமும் மகிழ மீண்டும் கலைகள் வளரப்பெற்றாரென்பர்.

## 8. "ஞான தரிசனன்"


வாயுவை வென்ற ஆதிசேஷனுக்கு ஏற்பட்ட செருக்கெனும் ஆணவத்தால் தம்பலம் குறையத் தொடங்கியதை யுணர்ந்த ஆதிசேஷன் இத் தென்னிலந்தைத் தலத்தின் மேல் பால் ஒரு தடாகத்தைத் தன் பெயரால் "சேஷ தீர்த்தம்" உண்டு பண்ணி மூழ்கி, நர்மதா தீரத்திலிருந்து ஒரு பாணலிங்கம் கொணர்ந்து அத்தடாகத்தின் மேல் பாகம் அமைவுறச்செய்து, அனந்தேஸ்பரர் என்று நாமஞ் சூட்டி, நீண்ட காலம் வேண்டி ஆசியும் ஆண்மையும் பெற்றாரென்பர்.

## 9. வதுவை விதம் தந்தோன்

திருக்கைலாயநாதன் குறுமுனியாம் அகத்தியரை நோக்கி "நீர் எமது ஆணைக்கிணங்க கீழ்வேளூர் வந்து தங்கியமையானே, எம் வதுவை விதம் தந்து மகிழ்ந்தோம் மேலும் வேண்டும் வரங்கேள் விழைந்து தருவோம்" என்றார். அகங்குழைந்த அகத்தியர் "தேவரீரின் திருத்தாண்டவத்தில் வலது பாதத்தையும் தரிசிக்கப் பேரவல் கொண்டுள்ளோம் அருளிட வேண்டும் சுவாமி" என்றார் அன்பெனும் வலையுள் அகப்படும் மலையாம் ஆடலரசர் இடமூன்றி வலந்தூக்கி மாறியாடினார் இம்மன்றுளாரென்பர். இத்தலத்தின் தனிச்சிறப்புகளுள் இஃதும் ஒன்றாம்.

## 10. வசிட்டருக்கு வரமளித்தோன்

தன்னெஞ்சறியாது தவறிழைத்த நிமிகன் என்னும் அரசனால் அளிக்கப்பட்ட பிரதி சாபப்பலிதத்தை நிவர்த்தி செய்துக்கொள்வதற்கு இத்தலம் வந்து கேடிலியைப்பூசித்துத்தவமிருந்து உடல்நலமுற்றார் தவசிரேஷ்டர் வசிட்டமாமுனியென்பர்.



## 11. மார்க்கண்டருக்கு மனக்கலக்கம் போக்கியோன்

சிரஞ்சீவியாக விளங்கிடும், என்றும் பதினாறகவை கொண்ட மார்க்கண்ட முனிவர் ஒருநாள் தம் நித்திய சிவ பூசையைத் தொடங்கும் போழ்து, பிர்மகற்பம் முடிந்து, கடல் பொங்கி அண்டபகிரண்டங்களை அழித்து வருவதை யறிந்தவராகி சிவபூசைக்கு இடுக்கண்நேராதிருக்கத் தியானித்தார். எந்தக் கற்பத்திலும் அழியாததும் எக்காலத்தும் இருக்கக்கூடியதுமான தென்னிலந்தைவனம் சென்று கீழ்வேளூர் கேடிலியை வணங்குவாயென்று வானொலியாக அசரீரி அறிவித்திடவே இவண் வந்து வதிந்தார், வணங்கினார் என்பர்.

## 12. துன்மதிக்கு முத்தி தந்தோன்

அந்தகக் காமுகன் ஒருவன் அரசக் காவலர்களால் துரத்தப்பட்டு தப்பிக்கும் வழியறியாதவனாகி தவறிப்போய் அட்சயலிங்கசுவாமி குண்டத்தில் குதித்தான்; அதிலிருந்த சிவாக்கினி அவனுடைய பாபதிரேகத்தையும், அவன்புரிந்த பாபங்களையும் தகித்தது. எனவே அவனது உடலும் ஊழ்வினையும் ஒருசேர சிவமயமாகவே சிவகணங்கள் அவன் ஆத்மாவை எதிர்கொண்டேற்றனரென்பர்.

## 13. தனமளித்த தக்கோன்

சந்திர குப்தன் எனும் வைசிய குலத்தான் தன் முன்னோர்கள் வைத்திருந்த அளவற்ற பொருளையெல்லாம் தீய வழியிற் செலவிட்டு, வறுமையின் வாய்ப்பட்டு, வயிற்றுக் கொடுமையால் பிச்சைக் காரனாய் இப்பதியடைந்தான். வீடுகள் தோறிரந்து வீதி வலம் மும்முறை வந்தும் வெற்றுவாயனாய்க் கோயிலிற்புகுந்து நந்தியின் பின்புறம்

நொந்து வீழ்ந்தான். திருக்கோயிலை மும்முறை வலம் வந்த பயனைத்தந்திடக் கருதியே ஈசன்; கும்பிட்டிருக்கும் குபேரனுக்குக் குறிப்பாலுணர்த்தி; சந்திர குப்தனுக்கு பெரும் பொருளும் புத்தியும் பக்தியும் தந்தருளினார் ஞானம் பெற்றவன் அழியும் பொருளால் உலையாப்பய- னெய்த ஊர்தோறும் ஆலயப் பணி செய்தான் என்பர்

## 14. சவ்வீரன் சாபம் தீர்த்தார்

பாலி நாட்டரசன் முற்கல முனிவரை அவன் அவ- மதித்ததால் மனைவியொடு அசுரர்களாகித் திரிவதைக் கண்ட நாரதர் கூறிய நல்லுரைப்படி, சவவீரன் தம் மனைவியொடு இத்தலம் நாடி சரவண தீர்த்தமாடி கேடி- லியைப்பாடி சாப நீக்கம் பெற்றாரென்பர்.

## 15. விதுர்மனுக்கு விளக்கந்தந்தோன்

இத்தல வில்வமரக் கிளையிலிருந்த குரங்கொன்று தழைகளைப் பறித்து, சிவலிங்கபூசை செய்துக்கொண்டி- ருந்த அந்தணர் சிரத்தில் போட்டுக் கொண்டிருந்தது. சினங்கொண்ட அர்ச்சகர் கணங்கொண்ட கல்லால் அதனை அடித்துக்கொன்றார்.

பூனை யொன்று இறைவன் பூசைக்கென்று இருந்த பாலை அருந்தியதைக்கண்ட பரிசாரகர் பாய்ந்- துத் துரத்தினார் அஞ்சிய பூனை ஆவுடையாரைச் சுற்றிச் சுற்றி வந்தது; ஆத்திரங்கொண்ட அர்ச்சகர் துரத்தித் துரத்தியடித்தார்; அடியுண்ட பூனை அவண் சிவலிங்கத் திருவுருவத்தின் அடியில் வீழ்ந்து மடிந்தது.

சிவராத்திரியில் வில்வம் போட்டதால் குரங்கும்; பயத்தோடு பன்முறை சுற்றி வந்து பாதத்தே உயிர் நீத்த தால் பூனையும் முறையே, மகாராட்டிர மன்னன் விதுர்- மனும், அவன் மனைவியுமாக பூதயத்தே வாழ்ந்தனர்.

அரசலை போந்த அகஸ்தியர் இவர்கட்கு முற்பிறவிப் பயனுணர்த்தவே அ ர ச னு ம் அரசியும் இத்தலமுற்று ஞானம்பெற்று நோற்றாரென்பர்.

## 16. தர்மஞ்ஞனுக்குத் தவப்பலன் தந்தோன்

தாம்பிரபரணி நதி தீரத்தில் வேணுவனத்தில் தேவ-சன்மா என்னும் ஓர் அந்தணன் மாதா பிதா பக்தியிற் சிறந்தவனாய் விளங்கினான். இரு முது குரவரும் ஒரு நாள் ஏக காலத்தில் சிவபதமடையவே; பெற்றோருடைய அஸ்திகளை புனித கங்கையிலே சேர்க்கக்கருதிச்செல்லும் வழியில் இவண் வந்து, சரவண தீர்த்தக்கரையில் அஸ்தி கடத்தை வைத்துவிட்டு, புஷ்கரணியில் நீராடும்போழ்து இறையருளால் பெருமழை பெய்ததால் கடமுருண்டுடைந் துத்தடாகத்தில் கரைந்தது. கவலுற்ற தேவசன்மா கடவுளை வேண்டினான். தாய் தந்தையரையே தெய்வமாகக் கருதிய த ன ய ன் தேவசன்மா தடாகத்தின்கண் புதிய தாமரைகள் பூத்திருக்கக்கண்டு பூரித்தான், அதன் கார-ணத்தை அசரீரி அறிவித்தது. அவன் ஆனந்த பரவசனாகி சிவதரிசனம் செய்துய்ந்தானென்பர்.

## 17. கழுதைக்கும் முழுதுணர்த்தினான்

சிங்கத்துவஜன் என்னும் அரசன் வேட்டையாடி டவனத்தில் அலைந்த களைப்பும் வேட்கையும் மிக்கூர்ந்திட, பரத்து-வாச முனிவர் ஆசிரமத்திற்கு முன் சென்று, அரசனென்ற ஆணவத்தால் ஆரவாரமாகக் கூவினான். ஆரவாரங் கேட்டு நிட்டைகெட்ட முனிபுஸ்கவர் வெகுண்டு வெளியில் வந்து ''கழுதை போல் கத்திய நீ கழுதையேயாகுக'' என்று சபித்தார்.

மற்றொரு காட்டரசன் விந்தியக்கிரியில் தபசு புரிந்திருந்த அகஸ்தியரைத் தரிசிக்க சென்றவர்களை மடக்கிக் கொள்ளையிட அவர்கள் அவ்வரசனை கழுதையாகிடச் சபித்துப் போந்தனர்.

ஆகவே இவ்விரு கழுதைகளும் சுற்றித்திரிந்து ஒருங்கு கூடி அலைந்தன. இவற்றை இவ்வூர் வணிகன் வளைத்துப் பிடித்துத் தம் பொருள்களைச் சுமக்க பயன்படுத்தினான். இவற்றை ஒரு நாள் இத்தலத்தின் பிர்மத் தீர்த்தக்கரையில் நீர் பருகவிட்டான். கறைகண்டன் அருளாலே கழுதைகள் பூர்வவுணர்ச்சி பெற்றன. இரண்டும் தம்முளே முற்பிறப்பின் வரலாற்றை மனித மொழியிலே பேசிக்கொண்டன. அறிந்த வணிகன் அவ்விடமிட்டேகினான். அவை இரண்டும் ஆலயத்தை வலம் வந்தன. அம்பலக் கூத்தனின் அருள் பெற்றன. ஆடித்திங்கள் முழு நிலா நாட்தொடங்கி சதுர்த்தி வரையில் பிர்மதீர்த்தத்தில் மூழ்கி நீரருந்தினால் நீவிர் மீண்டும் மனிதவுருவை அடைவீர்கள் என்ற அசரீரி ஒலிக்கக் கேட்டனர் என்பர்.

## 18. உற்பலாங்கிக்கு வாழ்க்கை வழங்கியவன்

துங்கபத்திரத்தில் வசித்து வந்த அகோபன் என்ற அந்தணனின் புத்திரி உற்பலாங்கிக்கு தக்க பருவமெய்திய ஞான்றும் தகுந்தவரன் கிடைக்கப்பெறாமையால் பெரிதும் வருந்தினர் அவ்வூருக்கு அதிதியாக வந்த அந்தணப்பிரம்மச்சாரியை ஒருவாறு தேர்ந்து மணஞ்செய்வித்தனர். மணம் முடித்த மறுகணமே மணமகன் பிணமகனானான். இவ்வதிர்ச்சியினால் இல்வாழ்க்கையே தமக்கு இல்லாதவாழ்க்கையென வெறுப்புற்ற உற்பலாங்கி தலயாத்திரையில் விருப்புற்றாள் அவள் பாதயாத்திரையாகவே இப்பதரி காரண்யம் வந்துற்று தற்போழ்து தொண்டமான்

குளமென விளங்கும் சூரியதீர்த்ததில், வைகாசி திங்கள் சோமவாரத்தில், நண்பகலில் நீராடினாள். உற்பலாங்கி-யின் முன் வினை விலகியது, முனிவர் ஆசிரமமொன்று முன் தோன்றியது. முனிவர் திருவடிகளில் வீழ்ந்து வணங்கினாள், முற்பிறவி உணரப்பெற்றாள், சென்ற பிறவியில் அறைகுறையாகச் செய்துவிட்ட கௌரி நோன்பை செம்-மையாகச் செய்யப் பணித்தார். உற்பலாங்கி உமையம்-மையை உள்நிறுத்தினாள். வனமுலைநாயகி அருளுரு-வாய்க் காட்சியளித்து. இறந்து போன அவன் கணவனை அழைப்பித்து இருவரையும் இல்லறமாம் நல்லறமாற்றிட அருளினானென்பர்.

## 19. மழுவெறிந்து கண்டித்தோன்

இத் திருத்தலத்தில் பணிபுரிந்த ஆதிசைவரின் மனைவி கருவுற்ற இரண்டாந் திங்களில் தன் கணவனை இழந்தாள் ஆகவே ஆதரவற்றவளானாள்; தற்காப்புக் கருதி தன தாயகஞ் சென்றாள்.

சிவாகம பண்டிதன் என்றோர் ஆண்மகவைப் பெற்றெடுத்தாள். கருவுற்ற நாள் முதலாய் கருத்தோடு தான் வளர்த்த மைந்தனுக்கு தக்க பருவம் வந்தவுடன் தன் தாயாதிகளிடம் வந்து இறந்து போன கணவன் இயற்றிய இறைப் பணிவாய்ப்பையும் எய்திய மான்யங்களையும் புத்திர வாரிசுக்கு வழங்கிடுமாறு விண்ணப்பித்தாள்.

ஆதிசைவரின் உறவினர்சிலர் கைம்பெண் பெற்றபிள்ளை-யென்றும் கற்பிழந்தவள் என்றும் கடக்ககருதி ஏசியதோடு சிவபூசைக்கு உரியவனுமல்லனென்று உறுதியாகக்கூறி மறுத்துரைத்தனர். இச்சொல்லம்புகள் கற்புடைமாதின் காதுகளில் புகுந்து நிலை குலையச் செய்தன. பெற்ற-மைந்தனின் கைப்பற்றி கடவுளின் முன்னிலையில் தன்னி-

லையைச் சத்தியஞ் சாற்றினாள். கடையர்கள் நம்ப மறுத்து நகையாடினர். கற்புக்கடம் பூண்ட பொற்புடைய தாய் கேடிலியப்பரை நோக்கி நீதி கோரினாள். பற்றியெரியும் தீயில் விழுந்த புழுவாய்ப்பதறி துடித்தாள். எங்கிருந்தோ இனம் புரியாத ஒலியொன்று இத்தலத்து மக்கள் அனைவர் செவிகளையும் சென்று பாய்ந்தது; திருக்கோயிலுள்ளிருந்து மழுவாயுதம் கர கரவென்று சுழன்று வர நந்தியும் வெருண்டு விலகி நகர்ந்தது. முறைமீறிப்பேசினின்ற ஆதிசைவரனைவர் சிரங்களையும் அணலிடைத் துரும்பாய் ஆக்கிற்றென்பர். அது முதலே இத்தலத்து நந்தி சற்றே விலகியிருப்பது சிறப்புமிகு சான்றாம் என்பர்.

## 20. ஆளுநங் கோவாயினான் ஆடும் நீதி கேட்டது

உக்ர வீரட்டான் எனும் பெயர் கொண்ட ஆட்டு வாணிபனின் மகன் மகரவீர்யன் என்பான் பூர்வ புண்ணிய வசத்தால் செல்வம் நிறைந்தவனாகவும், இப்பிறவிச்செயலால் பாவம் சேர்ப்பவனாகவும் வாழ்ந்தான். ஒருநாள் அவனது ஆடொன்றுகாணாமற்போயிற்று. மகர வீர்யன் தேடிக்கொண்டு வந்தான். இத்தலத்தின் தீர்த்தக் கரையில் லிகிதரிஷியானவர் நீராடிச் சந்திபண்ணி கிழக்கு நோக்கியிருந்து பிராணாயாமஞ்செய்துகொண்டிருந்தவரிடம், இப்பக்கல் ஆடொன்று வந்ததாவென வினவினான். அதுபோழ்து ரிஷியானவர் இதையறியாதவராய் தன் நாசியை அழுத்தியிருந்த விரலையெடுத்து காதைத்தொட்டார். அதைக் கண்ட வணிகன் ஆடு சென்ற திக்கை ரிஷியானவர் சைகையால் காட்டினாரெனக் கருதிச் சென்றான். எதிர் பாராதவிதமாக அவ்வழியில் ஆடு நின்றது. அவன் அதைப் பிடித்துக் கொண்டு போய்க்

கொன்று கூறு போட்டு விற்றான் கால வோட்டத்தில் லிகிதரிஷியை யமபடர்கள், பிடித்துப் போய் யமதர்மர் முன் நிறுத்தினர். இவர் எக்குற்றமும் செய்யாதவரேயா-யினும் ஆடு கொல்லப்பட்டதற்கு காரணராய் அமைந்த-மையான், காக்காய் உட்காரப் பனம்பழம் விழுந்தாற் போல், மகாவீர்யன் வீட்டில் லிகிதரிஷி ஆடாக பிறவி-யெடுத்தார். ஒரு நாள் வணிகன் இவ்வாட்டின் கழுத்தை அறுத்திட கத்தியையெடுத்தான். ஆடு சிரித்தது. அதன் காரணத்தைக் கேட்டு நடந்ததை அறிந்து மகாவீர்யன் மயர்வற மதி நலம் பெற்றான். ஆட்டை காட்டிக்கொடுத்-ததாகக் கருத்தப்பட்டதற்கே இக்கொடுந்தண்டனையென் றால், தனக்கென்ன வருமேவென ஓர்ந்து, உணர்ந்து, நினைந்துப் பயந்து, பக்திகொண்டு கத்தியை வீசிக் கடி-தில் எறிந்தான். அக்கத்தியே அவனுக்குக் குருவாகி விழுந்ததால் விழுந்த இடத்தை குருக்கத்தி என்றழைத்து அவ்விடத்தே சிவாலயம் எடுப்பித்து, கடகபுரீசர் என்ற நாமஞ்சாத்தி வழிபட்டான்.

தீபாம்பாள்புரம் என்று வழங்கும் வேதபுரத்தில் வேதபாரதியென்னும் அந்தணன் ஒருவன் இப்பகுதியில் வாழ்ந்த வேசியின் மோகத்தில் மூழ்கிக்கிடந்தான். தம் பொருளையெல்லாம் தாசிதரும் இன்பத்திற்கே விலை-யாகக்கொடுத்து தொலைத்தான். ஒருவேளை உணர்விற்-கும் அவள் தயவை எதிர்பார்த்தவனாய் தாழ்ச்சியும், தளர்ச்சியுமுற்றான். தாசியின் தாயால் விரட்டப்பட்டு வீதியில் வீழ்ந்து கிடந்தான்.

நாளும் கேடிலியை வழிபட்டுவரும் மாவீர்யன் ஒரு-நாள் வீதியில் வீழ்ந்துக்கிடக்கும் இவ்வந்தணனைக்கண்டு இரக்கம் கொண்டு, காரணங்கேட்டறிந்து ஆவன செய்து-தவிட முனைந்தான். வேதபாரதியை அழைத்துக்கொண்டு

வேசி சண்பகவல்லி வீட்டிற்குச்சென்று இவ்வந்தணனை மீண்டும் வீட்டினுள் சேர்த்துக்கொள்ளுமாறு கோரிக்கை வைத்தான் அதற்கு வேசியின் தாயார், பரிந்துரைக்கும் நீவீர் எம் இல்லில் அடிமைப்பணியாற்றினால், அவரை அனுமதிக்கிறோம் என்றாள். மாவீர்யன் இசைந்து பணி-யாற்றினான். ஆயினும் சிவதரிசனத்தையும் மறக்காமல் சிறக்கவே செய்து வந்தான். செய்யும்பணி எஃதேயாயி-னும் சித்தத்தைச்சிவன்பாலே வைத்திருந்தான்.

ஒருநாள் மாவீர்யன் வேசிவீட்டுப்பாத்திரத்தைச் சுத்தம் செய்துக்கொண்டிருந்தபொழுது, அந்த கழுநீர் தாசியின் தாய் மீது பட்டது. பட்ட மரம் துளிர்ந்தாற் போன்று அவள் தனது கிழப்பருவம் மறைந்து இளமை அடைந்தாள். கண்டோர் வியந்தனர். கண்டபடி பேசினர் மகளாகிய சண்பக வல்லி இதன் மர்மத்தைக் கேட்டாள். தாய் மறுமொழி சொல்ல இயலாதவளாய் திகைத்தாள். மனமுடைந்து சினங்கொண்ட மகள் தன்கழுத்தைத்தானே அறுத்துக் கொள்ள துணிந்தாள், அதுபோழ்து அசரீரி உண்மையை உரைத்தது. இறையருளை அறிந்த மூவரும் இணைந்தே ஈசனடி பணிந்து பரவினரென்பர்.

## II திருக்கோயிலமைப்பு

ஆணவ மலம் அடங்குவதற்குரிய இடத்தை ஆலயம் என்றனர் ஆன்றோர். இறைத்தத்துவங்களும், தன்மை-யும் அமையுமிடத்தைக் கோயிலெனக் கொண்டாடினர் முன்னோர். 'உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பாலயம்' என்ற திருமூலர் வாக்கிற்கிணங்கவும் பிண்டமே அண்டம் அண்டமே ஆலயம் ஆகும் என்பர். அண்டபிண்டங்கள் அனைத்தையும் அடக்கிக்கொண்டு இருக்கும் பரம் பொருளாகிய இறைவனது விராட்ஸ்வருபமே கோபுரமாகும்.

கோபுரத்தை ஸ்தூலலிங்கமென்றும், கோபுர தரிசனத்தை திருவடி தரிசனமென்றும் இறை நேயப்பெருமக்கள் இயம்புகின்றனர்.

ஆகவேதான் கீழ்வேளூர் திருக்கோயிலினுள் எழுந்தருளியுள்ள கேடிலியப்பரின் திருவடிப்பெருமைகளையெல்லாம் முதற்கண் ஏற்றிப்போற்றியதன் பின்னர் கீழ்க்கோபுர வாயிலினுள் கரங்கூப்பிக் கருத்தொருமித்து புகுகின்றோம். பலமுறை பிரகாரங்களைச்சுற்றி வலம் வருவது கோசங்களைக் கடந்து இறைவன் விளங்குகிறான் என்பதை நினைப்பூட்டுகின்றதன்றோ. இத்தலத்தில் வெளிப்பிரகாரத்தில் வடக்குப்பார்த்த கணபதியும் தென்மேற்கில் மிகப்பெரிய சுந்தரகணபதியும் வடமேற்கில் சித்திர சிற்பங்கொண்ட ஆறுமுக மயில் வாகனனும் அழகுற அமைந்துள்ளனர்.

மெய்க்காவல் கோபுரத்தில், வெளிப்பக்கமிருக்கும் துவாரபாலகர்களைப்போலவே உட்பக்கமும் இரு துவார பாலகர்கள் கம்பீரத்துடன் காவல் புரிகின்றனர். சூட்சமலிங்கமாகவும் விளங்கும் கொடி மரம் மும்மூர்த்திகளின் முத்தொழில்களையும் உணர்த்துகிறது கொடி மரத்தின் மேல்பாகத்திலிருந்த நந்தி சற்றே சந்நிதியைவிட்டு தென் பக்கம் விலகியிருப்பதைக் காண வியப்பாகும்.

முதற்பிரகாரச் சுற்றின் தென்பால் செயற்கரிய செய்த அறுபத்துமூவ நாயன்மார்களும், அவர்வளைத் தொடர்ந்தே அடக்கமாகவும், அழகாகவும் மாறுபாடின்றி ஒரே வரிசையாயுள்ள நவகிரகங்களும் நம் சிந்தனையைத் தூண்டும். ஆலமர் தென்முகக்கடவுளும், பதரிவிநாயகரும் பக்தர்கட்கு விருந்தாகும். எந்நாளிலும் பூத்துக்காய்க்கும்

தனி மதுரக் கனிதரும் இலந்தை மரமும் அதனடியில் மறைந்த நிலையிலிருக்கும் ஸ்வாமி குண்டமும், முந்தை நிலையுணர்த்தும்.

அகஸ்தியருக்கு, ஆளுங்கோவேஸ்வரருக்கு, விஸ்வ-நாதருக்கு, மகாலெட்சுமிக்கு, கைலாசநாதருக்கு, பிரகதீசுவரருக்கு, அண்ணாமலைநாதருக்கு, ஜெம்புகேசுவரருக்கு, குபேரனுக்கு, தேவேந்திரனுக்கு எனச்சிற்சிறு தனிக்கோயில்களும் நனிமிக விளங்குகின்றன.

அம்பிகை வனமுலை நாயகியின் வனப்பும் சிறப்பும் வற்றாத நற்காட்சியாகும். இந்நாயகி வடகிழக்கில் பத்ர காளியென்ற பெயருடன் தனிக்கோயில் கொண்டு அஞ்சு-வட்டத்தம்மை என்ற திரு நாமத்துடன் வடக்குப் பார்த்திருந்து பாலகனைக் காக்கும் தாய்ப்போலவே பரிந்து தம் பக்தர்களையும் காத்து வருகின்றாள். பிம்பம் சுதையாகையான் சாம்பிராணித்தைலம் சாத்துவது வழக்-கம். செவ்வாய் வெள்ளிக்கிழமைகளில் சிறப்பு வழிபாடு செய்கின்றார்கள். ஆண்டுதோறும் பங்குனி விழா சிறப்-புடைத்தாகும். சிக்கலில் வேல் வாங்கி திருச்செந்தூரில் போர் முடித்துக் கீழ்வேளூரில் செவ்வேள் செய்தவத்தைக் காத்த தாயின் கருணையே கருணை இறைஞ்சுவோர் நெஞ்சறிந்து; இல்லையெனாது வழங்கும் வடிவழகி அஞ்சுவட்டத்தம்மை அருளாளர் ஒருமுறை யானும் காணாதிரார், கைத்தொழாதிரார்.

கல் விமானங்கொண்ட கட்டு மலைப்படிக் கட்டுகள் தொடங்குமிடத்தில் முருகன் வடக்குப்பார்க்க பாலரூபமாய் புன்சிரிப்புடன் நின்று தவம் புரியும் காட்சி காணில், கண் பெற்ற பயனையெய்திடலாகும் கட்டுமலை மேலே அன்பர்கள் சுற்றிவர ஒரு சிறு பிரகாரம் அமைந்தது அற்புதம்.

தவநாயகர் என்றிங்கு வழங்கப்படும் தியாகராசர் திருவுருவம் சிறப்பாகும். கருங்கல் கர்ணக்கால் வேலை பார்க்கச் சலிக்காது. சிங்கவுருவங்களும், யாளி வரிசைகளும், வளைந்துத்தொங்கும் சட்டங்களும், அவற்றின் நுனியில் வாழைப்பூத் தொங்கல்களும், அதைத்தம் மூக்கால் கொத்தும் கிளிகளும், வேலைப்பாடு அமைந்த சன்னல்களும் முற்றும் கற்றூபிக்குள் அட்சயலிங்கம் அமைந்துள்ளமை காண்பார் கண்களையும் கருத்தையும் கொள்ளைகொள்ளும் கேடிலியப்பருக்குச் செய்யும் அபிஷேகத் தீர்த்தம் முதலியவை மலைக்குள்ளேயே வெகுதூரம் சென்று பூமியில் வந்திறங்கிப்பாய்வது விசித்திரமான அமைப்பாகவுளது.

வசந்தமண்டபம், முகமண்டபம் ஆகியவை உள்ளன. மகாமண்டபத்திலே தெற்குபார்க்க உற்சவ மூர்த்தமான ஸ்ரீ கல்யான சுந்தரரும், பக்தர்களும் நர்த்தனகணேசரும் இருக்கின்றார்கள்.

சபை நடுவே தென்முகமாக எங்கும் காணக்கிடைக்காத ஆடலரசின் வலது பாத தரிசனம் கிடைக்கிறது. மகாவிஷ்ணு மத்தளம் கொட்ட மகாலெட்சுமி கைத்தாளம் போட, கலைமகள் வீணை வாசிக்க, அகத்தியர் நின்று தரிசிக்கின்றார். "புளிக்கண்டவர்க்கு புனலூறும்மாபோல் சுளிக்குந் திருக்கூத்துக் கண்டவர்க்கெல்லாம், துளிக்கும் அருங்கண்ணீர் சோர் நெஞ்சுருக்கும், ஒளிக்குள் ஆனந்தத்தமுதூறும் உள்ளத்தே" எனும் திருமூலர் தருமந்திரம் திருமந்திரமேயன்றோ- இறுதியாக தந்தை இருதாள் துணித்துத் தம்பிரான் தாள் சேர்ந்த சண்டேசுவரர் இரு தாளிணைப்பற்றி சிவதரிசன பலனைப்பெறுவோமாக.

## III. திருக்கோயில் குறிப்பு

(கல்வெட்டுகளும் கட்டளைகளும்)

ஆதியில் ஜோதி வடிவாய் இவ்விலந்தைவனத்தில் ஆறுமுகத்தான் கண்ட அருள்மிகு அட்சயலிங்க சுவாமிக்கு சோழன் கோச்செங்கண் கட்டுவித்துள்ள இத்தலக்கட்டு மலையின் தென்சுவற்றில் திரிபுவன சக்ரவர்த்தி ராஜராஜ தவ சோழ ராஜன் ஆட்சியின் 18 ஆம் வருடத்தில் (கி பி 985 - 1014) இக்கோயிலுக்குச்செய்த பூதானம் குறிக்கப் பட்டுள்ளது.

மேலும் வனமுலைநாயகி அம்மன் கோயில் தென் சுவற்றில் ஷை மன்னன்தம் 10 ஆம் ஆண்டு ஆட்சிகாலத் தில் செய்த தானத்தின் விபரம் உள்ளது.

ஸ்ரீ துகோஜி மகாராஜா நாளில், கீழ்வேளூர் வெங்-கிடபதியபிள்ளை ஸ்ரீ அட்சயலிங்க சுவாமிக் கோயில் கட்டளையாக 50 ஆண்டுகளும், பின்னர் அவருடைய சந்ததியினர் 200 ஆண்டு காலமும் நிர்வகித்த குறிப்புகள் உள்ளன.

சாலிவாகன சகாப்தம் 1697 அதாவது கி பி 1775-ல் மன்மத ஹூ வைகாசி மீ தஞ்சையரசர் ஸ்ரீ துலஜாஜி தர்மம் குறிக்கப்பட்டுள்ளது. ஆகவே இக்கோபுர மேலமதி லில் ஸ்ரீ துலஜாஜி மன்னனும் ஆதிக்கட்டளைப்பிள்ளை-யும், பார்வதி பரமேஸ்வர தரிசனங்காணல் மிகவழகு-வாய்ந்தது.

மற்றும் கி பி 1859 ல் கீழ்வேளூர் வெங்கிடபதியா பிள்ளையின் குடும்பத்தினர் சபா நாயகர் சந்நிதிமண்டபம் கட்டியதாகவொரு கல்வெட்டு கூறுகிறது கி பி 1861 ல் துந்துபி வருடம் வைகாசி மீ 28 ஆம் நாள் ராஜ ஸ்ரீ

வடமலைப்பிள்ளை விசாரணையில் மகாகும்பாபிஷேகம் நடைபெற்ற குறிப்புளது.

துவஜஸ்தம்பம் கல்வெட்டில் 10—2—1902 ல் நாகை 9. T. M. துரைசாமிபிள்ளையால் கொடிமரத்தர்மம் செய்யப்பட்டதாகத்தெரிகிறது. கி பி 1906 ல் தஞ்சை மாவட்ட ஆட்சியரின் அரசிதழில், பக்கம் 241 - 243 ல், 15 ஆம் அத்தியாயத்தில் முதல் பிரிவில் காவிரி டெல்டாவில் இக்கற்கோவிலின் சிறப்பு பற்றிய செய்தியுளது.

1913 ஆமாண்டு செப்டம்பர் 16 ல் அருள்மிகு பாலசுப்ரமணியருக்கு மட்டும் திருப்பணிகள் திரு மெ. ராம. அ சுப்பிரமணியஞ்செட்டியார் விசாரணையில் நடந்ததாகவும் தெரிய வருகிறது.

1917 ஆமாண்டு தைத்திங்கள் 21 ல் திரு மெ. ராம. அ சுப்பிரமணியஞ்செட்டியார் விசாரணையில், சுந்தரகுஜாம்பாள் சமேத அட்சயலிங்க சுவாமிக்கும், கணபதி, பிரதோஷ விநாயகர், சம்பந்தர், சோமாஸ்கந்தர், ஓந்தாச்சிப்பிள்ளையார் ஆகியவற்றிற்கு அஷ்டபந்தனம், ஜடிபந்தனம் கும்பாபிஷேகம் நடந்ததாக தெரியவருகிறது.

1944 ஆமாண்டு ஏப்ரல் 21ல் குருக்கத்தி திரு. K V சுப்பையா முதலியார் அவர்கள் தர்மகர்த்தாவாக இருந்த காலத்தில் திருப்பணி செய்வித்துக்கும்பாபிஷேகம் செய்விக்கப்பெற்றுள்ளது.

1-9-1963ஆமாண்டு திரு எம். டி. தியாகராஜபிள்ளை தர்மகர்த்தா குழுத்தலைவராகப் பொறுப்பேற்றிருந்த காலை மகாகும்பாபிஷேகம் குறிப்பிடத்தக்க சிறப்புக்களுடன் நடந்தேறியுள்ளது.

1971 ஆம் ஆண்டு சரவண தீர்த்தக்குளத்தை சிறப்-பான முறையில் செப்பனிட்டு பக்தர்களுக்கு பயனுறுமாறு சுமார் ரூ 20,000 செலவில் செய்துள்ளனர்.

1972 ஆம் ஆடு ஜூன் மீ 23 ல் ஒரு லட்சம் ரூபாயில் கல்வி அறக்கட்டளை உண்டாக்கி அதன் வழி அறநிலை-யத்துறையினரால் அஞ்சுவட்டத்தம்மன் மகளிர் உயர் நிலைப்பள்ளி நடத்தப்பட்டு வருகிறது என்பது குறிப்பி-டத்தக்கதாகும். மகாலெட்சுமிக்கென அமைந்துள்ள தனிக் கோயிலும் திருப்பணி செய்யப்பட்டு குடமுழுக்கும் நடந்-தேறியுள்ளது,

14-11-1986 ல் அருள்மிகு அஞ்சுவட்டத்தம்மன் கோயிலுக்கும் வடக்கு கோபுரத்திற்கும் அட்ட பந்தனக் குடமுழுக்கு விழா நாகை ஆடிட்டர் திரு பக்கிரிசாமி அவர்களைத் தலைவராகக் கொண்ட திநப்பணிக்குழுவி-னரால் சிறப்புற நிறைவேறியது. மேலும் தற்போழ்து தக்காராகவுள்ள நெம்மேலி இராம. நடராஜன், நிர்வாக அலுவலர் கவிஞர் ஜோதி பி ஏ; ஆகியோரின் ஆர்வத்தி னால் ஆலயப்பணிகள் அனைத்தும் சிறப்புற நடந்து வருகின்றது எனின் மிகையாகாது.

இத்தலவரலாற்றிற்கு ஆதாரமாகவுள்ள அனைத்துச் செய்திகளும் 1-12-1944 ல், டிரஸ்டியாக விளங்கிய திரு N. ஜானகிராம அய்யர் பி. ஏ. பி எல்; அவர்களால் வெளியிடப்பட்டவையாகும். அண்ணார்க்கு ''பிர்மாண்ட புராணம்'' என்ற ஏட்டுப்பிரதிகள்மூலம் இத்தல மணியம் குருக்கள் மற்றும் திரு கலியாண சிவாச்சாரியாரும் அவர் தம் மரபினரும் குறிப்புகள் தந்துதவினராம் என்பர். மேலும் அந்தகக்கவி வீரராகவ முதலியார் செய்த ''கீழ்வேளூர் உலா,'' டாக்டர் உ. வே. சுவாமிநாதய்யர்

ஏட்டுப்பிரதிகளும், தேவாரப் பாசுரங்களும், செவிவழிச்-செய்திகள் முதலியனவும் 4-1-87 ல் வெளியாகும் இத்தல வரலாற்றிற்கு மூலமாகும். முக்கியமாக நிர்வாகஅலுவலர் கவிஞர் ஜோதி B. A; அலுவலக எழுத்தர்கள், ஆலய ஊழியர்கள், அர்ச்சக பெருமக்கள், தக்கார் உள்ளிட்ட திருப்பணி குழுவினர், நன்கொடையாளர், கீழ்வேளூர் இராஜன் அச்சகத்தார் அனைவரும் இறையருளால் முன் நின்றனர். ஒல்லும் வாயெல்லாம் உதவி செய்தோர் திருவடிகளே சரணம்.

நன்றி.

## சம்பந்தர் தேவாரம்

1. மின்னுலாவிய சடையினர்
விடையினர்மிளிர் தருமரவோடும்
பன்னுலாவிய மறையொலி
நாவினர்கறையணி கண்டத்தர்
பொன்னுலாவிய கொன்றை
யந்தாரினர் புகழ்மிகுகீழ்வேளூ
ருன்னுலாவிய சிந்தையர்
மேல்வினையோடிட வீடாமே

2. நீருலாவிய சடையிடை
யரவொடு மதிசிரநிரைமாலை
வாருலாவிய வனமுலையவ
ளொடு மணிசிலம்பவையார்க்க
வேருலாவிய விறைவன
துறைவிட மெழிறிகழ்கீழ்வேளூர்
சீருலாவிய சிந்தைசெய்
தணைபவர் பிணியொடுவினைபோமே

3. வெண்ணிலாமிகு விரிசடை
யரவொடு வெள்ளெருக்கலர்மத்தம்
பண்ணிலாவிய பாடலோடாடலர்
பயில்வுறு கீழ்வேளூர்ப்
பெண்ணிலாவிய பாகனைப்
பெருந்திருக் கோயிலெம்பெருமானை
யுண்ணிலாவி நின்றுன்கியசிந்தை
யாருலகி னிலுள்ளாரே

4. சேடுலாவிய கங்கையைச்
சடையிடைத் தொங்கலைத்தழகாக

நாடுலாவிய பலிகொளு
நாதனூர் நலமிகுகீழ்வேளூர்ப்
பீடுலாவிய பெருமையர்
பெருந்திருக் கோயிலுட்பிரியாது
நீடுலாவிய நிமலனைப்பபணிவர்
நிலைமிகப் பெறுவாரே

5. துன்றுவார் சடைச்சுடர்
மதிநகு தலைவடமணிசிரமாலை
மன்றுலாவிய மாதவரினிதியன்
மணிமிகு கீழ்வேளூர்
நின்றுநீடிய பெருந்திருக்
கோயிலினிமலனை நினைவோடுஞ்
சென்றுலாவி நின்றேத்த
வல்லார்வினை தேய்வதுதிணமாமே

6. கொத்துலாவிய குழறிகழ்சடையனை
கூத்தனை மகிழ்ந்துள்கித்
தொத்துலாவிய நூலணிமார்பினர்
தொழுதெழு கீழ்வேளூர்ப்
பித்துலாவிய பத்தர்கள்பேணிய
பெருந்திருக் கோயின்மன்னு
முத்துலாவிய வித்தினை
யேத்துமின் மூடுகியவிடர்போமே

7. பிறைநிலாவிய சடையிடைப்
பின்னலும் வன்னியுந்துன்றுருங்
கறைநிலாவிய கண்டரெண்
டோளினர் காதல்செய்கீழ்வேளூர்
மறையுலாவிய வந்தணர்மலிதரு
பெருந்திருக் கோயின்மன்னு

நிறையுலாவிய வீசனை
நேசத்தானினைப்பவர் வினைபோமே

8. மலைநிலாவிய மைந்தனம்மலை
யினையெடுத்தலு மரக்கன்றன்
தலையெலா நெறிந்தலறிட
வூன்றினானுறைதரு கீழ்வேளூர்க்
கலைநிலாவிய நாவினர்
காதல்செய்பொருந்திருக் கோயிலுண்
ணிலைநிலாவிய வீசனைநேசத்தா
னினையவல் வினைபோமே

9. மஞ்சுலாவிய கடற்கிடந்தவனெடு
மலரவன் காண்பொணணப்
பஞ்சுலாவிய மெல்லடிப்
பார்ப்பதிப்பாகனைப் பரிவொடுஞ்
செஞ்சொலார்ப் பலர்பரவிய
தொல்புகழ்மல்கிய கீழ்வேளூர்
நஞ்சுலாவிய கண்டனை
நணுகுமின்னடலைகண ணுகாவே

10. சீறுலாவிய தலையினர்நிலை
யிலாவமணர்கள் சீவரத்தார்
வீறிலாத வெஞ்சொற்பல
விரும்பன்மின்சுரும்பமர் கீழ்வேளூ
ரேறுலாவிய கொடியனையேதமில்
பெருந்திருக் கோயின்மன்னு
பேறுலாவிய பெருமையன்
றிருவடிபேணுமின்றவமாமே

11. குருண்டவார் குழர்சடையுடைக்
குழகனையழகமர் கீழ்வேளூர்த்

திரண்டமாமறையவர்தொழும்
பெருந்திருக் கோயிலெம்பெருமானை
யிருண்ட மேதியினமிகு
வயன்மல்கு புகலிமனசம்பந்தன்
றெருண்டபாடல் வல்லாரவர்
சிவகதிபெறுவது திடமாமே

## அப்பர் தேவாரம்

1. ஆளான அடியவர்கட் கன்பன் தன்னை
ஆனஞ்சும் ஆடியை நான் அபயம் புக்க
தாளானைத் தன்னொப்பா ரில்லாதனைச்
சந்தனமுங் குங்குமமுஞ் சாந்துந் தோய்ந்த
தோளானைத் தோளாத முத்தொப் பானைத்
தூவெளுத்த கோவணத்தை அரையி லார்த்த
கீளானைக் கீழ்வேளூ ராளுங் கோவைக்
கேடிலியை நாடுமவர் கேடிலாரே

2. சொற்பாவும் பொருள் தெரிந்து தூய்மை நோக்கித்
தூங்காதார் மனத்திருளை வாங்காதானை
நற்பான்மை அறியாத நாயினேனை
நன்னெறிக்கே செலும் வண்ணம் நல்கினானை
பற்பாவும் வாயாரப் பாடியாடிப் பணிந்
தெழுந்து குரைந்தடைந்தார் பாவம்போக்க
கிற்பானைக் கீழ்வேளூ ராளுங் கோவைக்
கேடிலியை நாடுமவர் கேடிலாரே

3 அளைவாயில் அரவசைத்த அழகன் தன்னை
ஆதரிக்கும் அடியவர்கட் கன்பே யென்றும்
விளைவானை மெய்ஞ்ஞானப் பொருளானானை
வித்தகனை எத்தனையும் பத்தர் பத்திக்

குளிவானை அல்லாதார்க் குளைய தானை
உலப்பிலியை உள் புக்கென் மனத்துமாசு
கிளிவானைக் கீழ்வேளு ராளுங் கோவைக்
கேடிலியை நாடுமவர் கேடிலாரே

4. தாட்பாவு கமலமலர் தயங்கு வானைத்
தலையறுத்து மாவிரதந் தரித்தான் தன்னைக்
கோட்பாவு நாளெல்லா மானுன் தன்னைக்
கொடுவினையேன் கொடுநரகக் குழியில் நின்றால்
மீட்பானை வித்துருவின் கொத்தொப்பானை
வேதியனை வேதத்தின் பொருள் கொள வீணை
கேட்பானைக் கீழ்வேளு ராளுங் கோவைக்
கேடிலியை நாடுமவர் கேடிலாரே

5. நல்லானை நரைவிடை யொன்றூர்தி யானை
நால் வேதத்தாறங்கம் நணுக மாட்டார்
சொல்லானைச் சுடர்மூன்று மானுன் தன்னைத்
தொண்டாகிப் பணிவார்கட் கினியான் தன்னை
வில்லானை மெல்லியலோர் பங்கன் தன்னை
மெய்யராய் நினையாதார் வினைகள் தீர்க்க
கில்லானைக் கீழ்வேளு ராளுங் கோவைக்
கேடிலியை நாடுமவர் கேடிலாரே

6. அழித்தானைக் கங்கைமலர் வன்னி கொன்றை
தூமத்தம் வாளரவஞ் சூடினானை
அழித்தானை அரணங்கள் மூன்றும் வேவ
ஆலால நஞ்சதனை உண்டான் தன்னை
விழித்தானைக் காமனுடல் பொடியாய்
வீழ மெல்லியலோர் பங்கனை முன் வேனிலானைக்
கிழித்தானைக் கீழ்வேளு ராளுங் கோவைக்
கேடிலியை நாடுமவர் கேடிலாரே

7. உளரொளியை உள்ளத்தி னுள்ளே நின்ற
ஓங்காரத்துப் பொருள்தான் ஆயினானை
விளரொளியை விடுசுடர்கள் இரண்டும்
ஒன்றும் விண்ணொடு மண் ஆகாச மாயினானை
வளரொளியை மரகதத்தி னுருவி னானை
வானவர்க ளெப்பொழுதும் வாழ்த்தியேத்துங்
கிளரொளியைக் கீழ்வே ளூருங் கோவைக்
கேடிலியை நாடுமவர் கேடிலாரே

8. தடுத்தானைக் காலனைக்காலாற் பொன்றத்
தன்னடைந்த மாணிக்கன் றருள் செய்தானே
உடுத்தானைப் புலியதளோடக்கும் பாம்பும்
உள்குவா ருள்ளத்தி னுள்ளான் தன்னை
மடுத்தானை அருநஞ்சம் மிடற்றுள் தங்க
வானவர்கள் கூடிய அத்தக்கன் வேள்வி
கெடுத்தானைக் கீழ்வேளூ ராளுங் கோவைக்
கேடிலியை நாடுமவர் கேடிலாரே

9. மாண்டா ரெலும் பணிந்த வாழ்க்கை யானை
மயானத்திற் கூத்தனை வாளரவோ டென்பு
பூண்டானைப் புறங்காட்டி லாடலானைப்
போகாதென் னுள்புகுந்திடங்கொண்டென்னை
ஆண்டானை அறிவரிய சிந்தையானை
அசங்கயனை அமரர்கள் தஞ்சங்கையெல்லாங்
கிண்டானைக் கீழ்வேளூ ராளுங்கோவைக்
கேடிலியை நாடுமவர் கேடிலாரே

10 முறிப்பான பேசி மலை யெடுத்தான் தானும்
முதுகிற முன்கைந் நரம்பையெடுத்துப்பாடப்
பறிப்பான் கைச்சிற்றலிவாள் நீட்டினானைப்
பாவியேன் நெஞ்சகத்தே பாதப்போது

பொறித்தானைப்புர மூன்னும் எரிசெய்தானைப்
பொய்யர்களைப் பொய்செய்து போதுபோக்கிக்
கிறிப்பானைக் கீழ்வேளூ ராளுங் கோவைக்
கேடிலியை நாடுமவர் கேடிலாரே.

## சுந்தரர் தேவாரம்

1. மறியேறு கரதலத்தீர் மாதிமையே லுடையீர்
மாநிதியந் தருவனென்று வல்லீ ராயாண்டீர்
கிறிபேசிக் கீழ்வேளூர் புக்கிருந்தீரடி கேள்
கிறியுமாற் படுவனே திருவாணை யுண்டேல்
பொறிவிரவு நற்புகர்கொள் பொற்சுரிகை மேலோர்
பொற்பூவும் பட்டிகையும் புரிந்தருள வேண்டுங்
கறிவிரவு நெய் சோறு முப்போதும் வேண்டும்
கடனாகைக்காரோண மேவியிருந்தீரே

## முத்துசாமி தீக்ஷிதர்

### பல்லவி

அக்ஷயலிங்க விபோ - ஸ்வாயம்போ
அகிலாண்டகோடி பிரபோ - பாஹிசம்போ
அக்ஷயலிங்கவிபோ

### அநுபல்லவி

அக்ஷரஸ்வருபா - அமிதப்பிரபாவ
ஆரூடவ்ருஷவாகா - ஜகன்மோஹா
தக்ஷ சிக்ஷண தக்ஷதர ஸிர
லக்ஷண விதி விலக்ஷண லக்ஷ்ய
லக்ஷண பஹு விசக்ஷண ஸிதா பக்ஷண
குரு கடாக்ஷவீக்ஷண - அக்ஷயலிங்கவிபோ

## சரணம்

பதரி வனமூல நாயிகா ஸஹித
பத்ரகாளீச பக்த விஹித
மதன ஜனகாதி தேவ மஹித
மாயா கார்ய கலநா ரஹித
ஸதய குருகுஹதூத குணாதீத
ஸாது ஜனோபேத சங்கர நவநீத
ஹ்ருதய விபக்த தும்புரு ஸன்னுத
ஹ்ரீங்கார ஸஞ்ஜாத ஹேமகிரிநாத
ஸதாச்ருத கல்பக மஹோருஹ
பதாம்புஜ பவரத கெஜ துரக
பதாதி ஸம்யுத சைத்ரோத்ஸவ
ஸதாசிவ ஸச்சிதானந்த மய -

அக்ஷயலிங்கவிபோ

# அருள்மிகு அட்சயலிங்கசுவாமி திருக்கோயில்,
# கீழ்வேளூர்.

## திருக்கோயில் பற்றிய குறிப்புகள்

1. கோட்செங்கட்சோழ மன்னரால் கி. பி. ஏழாம் நூற்-றாண்டில் கட்டப்பெற்றது
2. அப்பர், சம்பந்தர், சுந்தரர் ஆகியோரால் பாடப் பெற்றது

## சொத்து விபரம்.

| | |
|---|---|
| நஞ்சை | 554.76 ஏக்கர் |
| புஞ்சை | 124.79 ,, |
| கட்டிடங்கள் குடியிருப்பு | 8 |
| கடைகள் | 7 |
| மனைக்கட்டிடம் | 370 |
| மனைப்பகுதிதாரர்கள் | 370 |
| நஞ்சைக் குத்தகைதாரர்கள் | 179 |
| கட்டிட வாடகைதாரர்கள் | 34 |

கேட்பு நெல் குவி. 2000 ரொக்கம் ரூ. 20,000/-

ஆண்டு வருமானம் சுமார் ரூ. 2,00,000

## வருமான விபரம்.

| | |
|---|---|
| நிலங்கள் | ரூ. 1,70,000-00 |
| கட்டிடங்கள் | 8,000-00 |
| மனைப்பகுதி | 6,000-00 |
| உண்டியல் | 2,500-00 |
| அர்ச்சனை | 700-00 |
| இதரவரவுகள் | 12,800-00 |
| கூடுதல் | 2,00,000-00 |

## செலவு விபரம்.

| | | |
|---|---|---|
| நிர்வாகச் செலவு | ரூ. | 70,000-00 |
| பூஜை உற்சவ செலவு | | 30,000-00 |
| நிலவரி | | 20,000-00 |
| இலாகா கட்டணம் | | 15,000-00 |
| கல்வி நிறுவனம் | | 5,000-00 |
| பண்ணை மற்றும் இதரம் | | 40,000-00 |
| கூடுதல் | | 1,80,000-00 |

4. 1—9—1963 ல் கும்பாபிஷேகம் செய்யப்பெற்றது
5. சென்னை துணை ஆணையர் உத்திரவு ஒ ஏ. 141/58 ன்படி ஆலயம் நிர்வகிக்கப்படுகின்றது
6. சேவார்த்திகளுக்கு குடிநீர், தங்குமிடம்வசதியுள்ளது
7. ஆலய நிர்வாகத்தில் திரு அஞ்சுவட்டத்தம்மன் மகளிர் உயர்நிலைப்பள்ளி நடைபெற்று வரப்பெறுகின்றது

| | |
|---|---|
| மாணவியர் எண்ணிக்கை | 292 |
| ஆசிரியைகள் எண்ணிக்கை | 10 |
| இதர பணியாளர்கள் எண்ணிக்கை | 5 |

8\. முக்கியத் திருவிழாக்கள்

| முக்கியத் திருவிழாக்கள் | மாதம் | விழாவிற்கு வருபவர்கள் |
|---|---|---|
| சித்திரை ஏகதின ரிஷபவாகனம் | சித்திரை | சுமார் 3000 |
| சப்தஸ்தான பல்லக்கு | சித்திரை | 3500 |
| வலது பாத நடராஜர் ஆனிமகம் | ஆனி | 500 |
| கந்தசஷ்டி உற்சவம் | ஐப்பசி | 2500 |
| ஸ்ரீ அஞ்சுவட்டத்தம்மன் திருவிழா & தேர் | பங்குனி | 3000 |

## முதலீடுகள்.

மகளிர்பள்ளி அறக்கட்டளைக்கு ரூ. 1,00,000
ஆலயத்திற்கு 1,02,000
தங்கம், வெள்ளி நகைகள்
& வாகனம் மதிப்பு 25,873
நகைகள் மதிப்பீடு செய்த தேதி
23-8-1976
கார்த்திகை 4வது சோமவாரக்கட்டளை 81
செலவு செய்யப்பெற்று வருகிறது.

## பணியாளர்கள் விபரம்.

அலுவலகம் 4 உள்துறை 21
பணியாளர்கள் செலவு ரூ. 64,500

அண்மையில் அருள்மிகு அஞ்சுவட்டத்தம்மன் திருக்கோயில் பழுது பார்க்கப்பெற்று குடமுழுக்கு 14-11-86ல் நடைபெற்றது.

## செய்யவேண்டிய முக்கியப்பணி.

திருமண மண்டபம் மற்றும் மகளிர் பள்ளிக் கட்டிடம் கட்டுதல்.

செயல் அலுவலர் பெயர்: திரு எஸ். ஜோதி, பி. ஏ,
*4-6-1985 முதல் பணியாற்றிவருகிறார்*

தக்கார் பெயர் : திரு இராம. நடராஜன்
*20-8-1983 முதல் பணியாற்றிவருகிறார்*

## விற்பனை விபரம்.

| | | | |
|---|---|---|---|
| தலவரலாறு | 2-00 | அம்மன்சகஸ்ரநாமம் | 1-50 |
| சுவாமிஅஷ்டோத்திரம் | 0-50 | மாவிளக்கு | 0-50 |
| அம்பாள் ,, | 0-50 | அபிஷேகம் | 4-00 |
| திரிசதை | 1-00 | முடிகாணிக்கை | 1-00 |
| சுவாமி சகஸ்ரநாமம் | 1-50 | கற்பூர ஆரத்தி | 0-15 |